**நீர் மற்றும் சுகாதார சேவைகள் குறித்த பொதுமக்கள் ஆலோசனை கூட்டத்தின் போதான முன்வைப்புகள் மூலம் பங்கேற்பாளர்களை விழிப்பூட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட கேள்விகளின் தொகுப்பு.**

இந்த கேள்விகளின் மூலம் உங்களுக்கு வழிகாட்டலொன்று மாத்திரமே முன்வைக்கப்படுகிறது. உங்களுக்கு பொருத்தமானது என நினைக்கும் கேள்விகள் அல்லது கொள்கையை வகுப்பதற்கு முக்கியமானது என்று நீங்கள் கருதும் கேள்விகளை மாத்திரம் நீங்கள் தெரிவு செய்யலாம். உங்கள் கருத்துக்கள் இந்த கேள்விகளுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது இல்லை.

1. “24 மணி நேர நம்பகமான நீர் சேவையை” வாடிக்கையாளருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியையும் அர்ப்பணிப்பையும் நீங்கள் எவ்வாறு அடையாளம் காண்கிறீர்கள்?
   - 1.1. நீங்கள் வசிக்கும் அல்லது நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச வீடுகளில் எத்தனை வீடுகளுக்கு 24 மணிநேர நம்பகமான நீர் சேவை கிடைக்கின்றது?
   - 1.2. கிணறுகளைப் பயன்படுத்தி அல்லது பிற மூலங்களிலிருந்து நீர் பெறப்படுமாயின், அந்த நீர் சேவை வழங்கல், உங்களுக்கு அல்லது நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு முறையான குழாய் மூலமான நீர் வழங்கப்பட வேண்டியது எந்தளவிற்கு அவசியமானது என நீங்கள் கருதுகின்றீர்கள்?
   - 1.3. தற்போது குழாய் மூலமான நீர் வழங்கல் அமைப்பு காணப்படின், அந்த திட்டத்திலிருந்து 24 மணி நேரமும் நம்பகமான நீர் வழங்கல் கிடைக்கின்றதா?
   - 1.4. தண்ணீரை சேமித்து வைக்காது நேரடியாக சேவை வழங்குனரிடமிருந்து நீர் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என உங்களுக்கு எதிர்பார்க்க முடியுமா?
   - 1.5. நீங்கள் நீர் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு கலப்பின முறைகளான கிணறுகள் மூலம் அல்லது மழைநீர் சேகரிப்பு போன்ற முறை மூலமாக அல்லது சில மணி நேரங்களுக்கு குழாய் மூலமான நீரை பெற்றுக் கொள்ளும் திட்டம் குறித்த உங்களது கருத்து.
   - 1.6. உங்களுக்கு அல்லது நீங்கள் பிரநிதித்துவப்படுத்தும் பிரதேசத்தில் வழங்கப்படும் அல்லது பெற்றுக்கொள்ளும் நீரின் தரம் மற்றும் நீரை நேரடியாக கொதிக்க வைக்காது குடிப்பதற்கு பயன்படுத்த முடியுமா என்பது குறித்து.

2. 2019ஆம் ஆண்டின் பின்னர் தயாரிக்கப்பட்ட நீர் தேவை குறித்த அறிக்கையொன்றில் இலங்கையின் நீர் மற்றும் சுகாதாரம் தொடர்பில் இதுவரை காணப்படும் சேவை வழங்கல் மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் மொத்த மக்கள் தொகையில் 41.3 சதவீதத்தினருக்கு குழாய் நீர் வழங்கப்பட்டுள்ளதாகவும், உள்ளுராட்சி நிறுவனங்கள் மற்றும் பிரஜா மூல நிறுவனங்களின் மக்கள் தொகையில் 12 வீதமானோர் குழாய் நீர் மூலமாக சேவையை பெற்றுக் கொள்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் மக்கள் தொகையில் 38.7 வீதமானோரின் அடிப்படை நீர் வழங்கலாக பாதுகாப்பான கிணறுகள், மழை நீர் சேகரிப்பு மற்றும் அருகிலுள்ள பொது இடங்களான கையினால் இறைக்கும் குழாய் கிணறுகள், பொது கிணறுகள் மூலம் நீரை பெற்றுக் கொள்வதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், தோட்டப்புறங்களை அண்மித்த மக்களில் சுமார் 70 சதவீதமானோர் தேசிய நீர் வழங்கல் மூலம் நீரை பெற்றுக் கொள்வதுடன், இது பாதுகாப்பான நீர் வழங்கலின் சதவீதத்தில் வேகமான அதிகரிப்பை காட்டுகிறது.

   சுகாதார பாதுகாப்பு, நாடு முழுவதும் 92 சதவீதத்திற்கும் அதிகமாக காணப்படுவதுடன், அது தோட்டப்புறங்களை அண்மித்த பகுதிகளில் 67 சதவீதமாகக் காணப்படுகிறது. இங்கு பெரும்

எண்ணிக்கையிலானோர் பொது மலசலகூடங்களை பாவிக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இலங்கையில் பெரும்பாலானோர் சரியான முறையிலான கழிப்பறைகளை பாவிக்கின்றனர். இன்னும் 2 சதவீதமானோருக்கு மலசலக்கூட கூட வசதிகள் இல்லாததுடன், இவர்கள் வெட்டவெளிகளில் மலம் கழிக்கின்றனர். பாதுகாப்பான மலசலகூட வசதிகளின் எண்ணிக்கை 2.1 வீதமாவதுடன், இது பிரதானமாக கொழும்பிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 3 வருடங்களுக்கு களஞ்சிய வசதி கொண்ட இரண்டு குழிகளை கொண்ட நீர் சீல்செய்யப்பட்ட கழிவறைகள் பாதுகாப்பான சுகாதார முறையுடன் கூடியதாக பார்க்கப்படுகிறது.

2.1. உங்களது மாகாணத்தில் அல்லது மாவட்டத்தில் (தயவுசெய்து பிரதேசத்தை குறிப்பிடவும்) மேலே குறிப்பிட்டுள்ளபடி பாதுகாப்பு தேசிய சராசரிக்கு மேலே அல்லது கீழே உள்ளதா? எந்த பகுதிகளில்? திட்டவட்டமாக கூறுங்கள். சாத்தியமாயின், சரிபார்க்கக்கூடிய ஆதாரங்களைக் முன்வையுங்கள்.

3. கொழும்பிற்கு "திறமையான குப்பை, கழிவுநீர் மற்றும் திரவ கழிவு மேலாண்மை அமைப்பு மற்றும் நீர் சுத்திகரிப்பு முறையை அறிமுகப்படுத்துவதாக" அரசாங்கம் உறுதியளித்துள்ளது.
   3.1. பிற நகரங்கள் மற்றும் நகர்ப்புறமற்ற பகுதிகளில் கழிவுநீர் மற்றும் மலம் கசடு மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்துவது எவ்வளவு முக்கியம்?
   3.2. இந்த திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான சிறந்த வழி என்ன?

4. தற்போதைய பிரச்சினைகள் யாவை, உங்கள் பிரதேசத்தில் கழிவுநீர் தொட்டிகள் தொடர்பில் ஏதேனும் சிக்கல்களை எதிர்நோக்கியதுண்டா?

5. அரசாங்கத்தின் நீர் சேவை வழங்கல் நகர்ப்புற, கிராமப்புற மற்றும் தோட்டப்புறம் ஆகிய அனைத்து பகுதிகளிலும் ஒரே குறிக்கோளின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டும். இன்றேல் அந்த ஒவ்வொரு பகுதிக்கும் என வேறுபட்ட குறிக்கோளை கொண்டிருக்க வேண்டுமா?
6. நீர் மற்றும் சுகாதார சேவைகளுக்கு பாரிய முதலீடு அவசியமாகும்.
   6.1 நீங்கள் நம்பும் வகையில் இந்த முதலீடுகளுக்கான பொறுப்பு உள்ளூராட்சி நிறுவனங்களினால் அல்லது மத்திய அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமா? அந்த நிறுவனங்களுக்கு இந்த முதலீட்டை பொறுப்பேற்பதற்கான திறன் உண்டா?
   6.2 செலவை உள்ளடக்கிய கட்டண முறையொன்றை அறிமுகப்படுத்துவதன் ஊடாக நீர் சேவைக்கு முதலீட்டை பெற்றுக்கொள்வது இலகுவாகும் என நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? சலுகை நிபந்தனைகளுக்கு அமைய குறைந்த வட்டி வீதத்தின் கீழ் கிடைக்கும் குறைந்த வட்டியுடனான கடனுக்காக சுழற்சி நிதியை இந்த துறையில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?
   6.3 செலவை உள்ளடக்கிய கட்டணத்தை செலுத்தி நீர் சேவையை பெற்றுக்கொள்ள நீங்கள் தயாரா?
   6.4 நீர் சேவை வழங்கலில் தனியார் துறையின் பங்களிப்பை நீங்கள் எவ்வாறு காண்கின்றீர்கள்?
   6.5 சேவை வழங்குனரின் செயற்திறனை எவ்வாறு மேம்படுத்துவது?

7. நீர் மற்றும் கழிவுநீர் குறித்த கட்டணங்களை தீர்மானிக்கும் அதிகாரம் யாரிடம் இருக்க வேண்டும்?
   7.1. சேவை வழங்குனர்?
   7.2. மாகாண சபை அமைச்சு?
   7.3 மத்திய அரசாங்கத்தின் அமைச்சு?
   7.4 பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு?

7.5. வாழ்க்கைச் செலவு குறியீடு போன்ற காரணிகளுடன் பிணைக்கப்பட்ட ஒரு சூத்திரத்தின் அடிப்படையில்?

8. ஒழுங்குறுத்தல் செயற்பாட்டினூடாக கட்டணம் தீர்மானிக்கப்படின், அது எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை திருத்தப்பட வேண்டும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?
9. குழாய் மூலம் பெறப்படும் நீரின் தன்மையை ஒழுங்குறுத்துவது அவசியமா?
    9.1. வழங்குனரினால் உரிய காலத்தில் தரத்தை பரிசோதித்து அதனை பிரசித்தப்படுத்த வேண்டுமா?
    9.2. ஒழுங்குறுத்துனரினால் பரிசோதிக்க வேண்டுமா அல்லது வழங்குனரினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனையை ஒழுங்குனரினால் பரிசோதிக்க வேண்டுமா?
    9.3. பரிசோதிப்பதற்கு மிகவும் உகந்த காலம் யாது? இன்றேல் அதனை ஒரு ஒழுங்குமுறையின்றி மேற்கொள்ள வேண்டுமா?
10. கட்டணத்தை தீர்மானிக்கும் போது அல்லது நீரின் தரம் தொடர்பில் தர நிர்ணயம் போன்ற ஒழுங்குறுத்தல் செயற்பாட்டிற்கு மிகவும் உகந்த இடம் கொழும்பா அல்லது மாகாண தலைநகர்களா?